# பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நகர்ப்புறப் பசுமைச்சூழல்

**லாவண்யா வீரராகவன்**

நகரமயமாதலின் பலனாக அனைத்துலக அளவில் பல்லுயிர் பெருக்கத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக நம்பப்படும் அதேவேளையில் சிங்கப்பூரில் பெருகிவரும் நகர்ப்புறப் பசுமையாக்கம், பல உயிரினங்களுக்கு வாழ்வு இடங்களை ஏற்படுத்தித் தரும் வாய்ப்புள்ளது எனும் கூற்றுக்கு வலுசேர்க்கும் ஆய்வு ஒன்று நடைபெற்றுள்ளது.

சிங்கப்பூர்ச் சாலைகளில் உள்ள சாலையோரப் பசுமையிடங்கள் பட்டாம்பூச்சிகளுக்கு நன்மையளிப்பதுடன் முக்கியமான மகரந்தச் சேர்க்கைகளுக்கும் வழிவகுப்பதாகக் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆசிய சுற்றுச்சூழல் பள்ளியின் (Asian School of the Environment) ஆய்வுக்குழு நடத்திய ஆய்வின் முடிவில் சாலையோரத் தாவரங்களால் பட்டாம்பூச்சி எண்ணிக்கையையும் அவற்றின் பன்முகத்தன்மையையும் அதிகரிக்க முடியும் என்று தெரியவந்துள்ளது.



நன்யாங் பல்கலைக்கழக இணைப்பேராசிரியர் எலனோர் எம். ஸ்லேட்டுடன் ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர் தாரக சுதேஷ் பிரியதர்ஷன. **படங்கள்: ஆய்வுக் குழு**

“விரைவாக முன்னேறி வரும் உலகில், தேவைகளையும் கருத்தில் கொண்டு பல்லுயிர்ப் பெருக்கத்துக்கான சாத்தியக்கூறுகளையும் ஆராய்வதே சிறந்த வழி. இரண்டுக்குமிடையிலான சமநிலையை எட்டும் முயற்சிகளில் ஈடுபடுவதே என் விருப்பம். அதன் ஒரு பகுதிதான் இந்த ஆய்வு,” என்றார் ஆய்வில் முதன்மை எழுத்தாளர் சூழலியல் வல்லுநர் தாரக சுதேஷ் பிரியதர்ஷன.

பல வகையான பூச்சியினங்கள் மகரந்தச் சேர்க்கைகளுக்கு உதவினாலும், பட்டாம்பூச்சிகள் சுற்றுச்சூழல் அமைப்பின் குறியீடுகளாக இருப்பதால் அவற்றைப் பாதுகாப்பதும் கவனிப்பதும் அவசியம் என இந்த ஆய்வு சுட்டுகிறது.

சிங்கப்பூர் முழுவதும் புதர்களையும், பூர்வீகமில்லாத (Non-Native) தாவர வகைகளையும் கொண்ட 101 சாலையோரங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நகரின் வெவ்வேறு பகுதிகளில், குறைந்தது 30 மீட்டர் தொடர் தாவர அமைப்புகள் உள்ள, வெவ்வேறு வேக வரம்புகளைக் கொண்ட சாலைகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது என்றார் திரு தாரக.



வரி வெள்ளையன் எனப்படும் ‘Striped Albatross’ வகை பட்டாம்பூச்சி.

பட்டாம்பூச்சிகள் குறிப்பிட்ட சில மலர் இனங்களை விரும்பும் என்பதால், தேன்-மலர் பன்முகத்தன்மை, தாவர வகைகளின் கட்டமைப்பு, அவற்றின் வளமை என அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட்டதாகக் கூறினார் அவர்.

மொத்தம் 96 மலர் இனங்களில் 56 பட்டாம்பூச்சி இனங்கள் மேற்கொண்ட 1320 தேன் உண்ணும் நிகழ்வுகளைப் பதிவு செய்ததாகக் கூறிய அவர், தாவரப் பன்முகத் தன்மையும் செழுமையும், தேன் அதிகம் உண்ணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

உள்ளூர் வாழ்வு இடங்களுக்கும், நிலப்பரப்பு அம்சங்களுக்கும், பல்லுயிர்ப் பெருக்கத்துக்கும் இடையேயான சிக்கலான உறவுகுறித்துத் தெளிவான பார்வையை இந்த ஆய்வு அளிக்கும் என நம்புவதாக அவர் தெரிவித்தார்.

சாலையோரத் தாவரங்கள் பெரும்பாலும் பருவகாலத்தில் மட்டும் பூப்பூக்கும் பூர்வீகத் தாவரமாக இல்லாமல், தொடர்ந்து பூக்கும் வகைகளாக அமைந்துள்ளன.

இவை குறிப்பாக அழகியலை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும், பட்டாம்பூச்சிகளுக்கு அதிக நிலையான தேன் வளங்களையும் வழங்குவதாக ஆய்வு குறிப்பிடுகிறது.

தொடர்ந்து, சாலையோரத் தாவரங்கள் சீராக ஒரே உயரத்தில் கத்திரித்துவிடப்படுவதைவிட, இயற்கையாக சீரற்ற உயரங்களில் விடப்படுவது பட்டாம்பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

lveer@sph.com.sg